வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியின்

தேதி 4.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

21-ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் அரசின் சாதனைகள் இடம் பெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

டெல்லியில் நாளை நடைபெற உள்ள, 70 உறுப்பினர் சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டு உள்ளன.

வளர்ச்சியைத் தூண்டி மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்து இருப்பதாக மத்திய நிதிதுறை செயலர் திரு டிகே பாண்டே கூறி உள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற உள்ள, காய்-கனி மற்றும் மலர் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் குறித்து, வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

மோடி-பதில்

தமது அரசு கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டுள்ளதாகவும், 4 கோடி ஏழைகளுக்கு வீடு கட்டித் தரப்பட்டுள்ளதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில் குடியரசு தலைவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு இன்று மக்களவையில் பதில் அளித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். ஏழைகளுக்கு 12 கோடி கழிப்பறைகள் தமது அரசால் கட்டித் தரப்பட்டுள்ளதாகவும், 12 கோடி மக்களுக்கு, குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வெற்று வாக்குறுதிகளை தமது அரசு மக்களுக்கு வழங்குவதில்லை என்றும், 21-ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் அரசின் சாதனைகள் இடம் பெறும் என்றும் பிரதமர் கூறினார்.. சாதாரண மற்றும் நடுத்தர மக்களின் மேம்பாட்டிற்காக தமது அரசு தீவிரமாக பாடுபட்டு வருவதாகவும் அவைக்கு

வெளியே புகைப்படங்களுக்காக பேட்டி கொடுப்பவர்களுக்கு, ஏழைகள் பற்றிய உரை அலுப்பாகவே தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டெல்லி- தேர்தல்

டெல்லி தலைநகர பிரதேசத்தில் நாளை நடைபெற உள்ள, 70 உறுப்பினர் சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டு உள்ளன. நாளை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும். நாளைய தேர்தலில், சுமார் 1 கோடியே 56 லட்சம் வாக்காளர்கள், 699 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலத்தை, தீர்மானிக்க உள்ளனர். தேர்தல் ஆணையம், 1 லட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்தி உள்ளது. உத்தரபிரதேசத்தின் மில்காபூர் சட்டமன்ற தொகுதி, மற்றும் தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியிலும், இடைத் தேர்தல் வாக்குப் பதிவு நாளை நடைபெற உள்ளது. இந்த எல்லாத் தொகுதிகளிலும் பதிவாகும் வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படும்.

புற்று நோய் தினம்

உலக புற்று நோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு நோயாளியின் புற்று நோய் அனுபவமும் வெவ்வேறானவை என்றாலும், புற்று நோயாளிகளுக்கு தேவையான ஆறுதல் ஒன்று தான் என்பதை குறிக்கும் வகையில், United By Unique என்ற கருப்பொருள் அடிப்படையில் இன்றைய தினம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது குறித்து மேலும் சில தகவல்கள்…………………

**(வாய்ஸ்)**

**(வாய்ஸ்)**

உலக சுகாதார அமைப்பின் ஆய்வு முடிவுகளின் படி, உலகிலேயே அதிக எண்ணிக்கையில் மரணங்களை ஏற்படுத்தும் நோயாக புற்று நோய் திகழ்கிறது. இந்தியாவில் கடந்த 2022-ல், சுமார் 14 லட்சத்து 60 ஆயிரம் பேர் புற்று நோயினால் உயிர் இழந்தனர். நடப்பாண்டில் இந்த எண்ணிக்கை, 15 லட்சத்து 70 ஆயிரமாக அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஆயினும் புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்தால் முற்றிலுமாக குணப்படுத்த முடியும். இதைக் கருத்தில் கொண்டே, ஆரம்பநிலை நோய் கண்டறிதல் மற்றும் தனிப்பட்ட கவனத்துடன் கூடிய தொடர் சிகிச்சை என்ற 2 முக்கிய அம்சங்களுடன் கூடிய திட்டம் ஒன்றை மத்திய அரசு இவ்வாண்டு பட்ஜெட்டில் அறிவித்துள்ளது. இதன்படி நாடு முழுவதும் 200 இடங்களில், புற்று

நோயாளிகளுக்கான, பகல் நேர கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. ஆயுஷ்மான் பாரத் மற்றும் பிரதமரின் ஜன் ஆரோக்கிய திட்டத்தின் மூலமாகவும், நாட்டில் புற்று நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசுடன் கை கோர்த்து புற்று நோய் இல்லாத இந்தியாவை உருவாக்க, உலக புற்று நோய் தினமான இன்று, நாம் அனைவரும் உறுதி ஏற்போம்.

நட்டா

எதிர்காலத்தில் கொள்ளை நோய் ஏற்பட்டாலும் நிலவரங்களை எதிர்கொள்ளத் தேவையான, வலுவான சுகாதார கட்டமைப்பு, இந்தியாவில் இருப்பதாக மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜேபி நட்டா கூறி உள்ளார். இன்று மாநிலங்களவையில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், நாட்டில் கொள்ளை நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை, தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம், தொடர்ச்சியான முறையில் கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

கிருமிகள் மட்டுமின்றி, பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டினாலும் பல நோய்கள் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டே, ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவிலான, **தேசிய ஒரே சுகாதார இயக்க**த்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்திருப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

கும்பமேளா

பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவில், இன்று பூட்டான் மன்னர் ஜிக்மே நாம்கியேல் வாங்சுக் கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார். திரிவேணி சங்கமத்தில் பூட்டான் மன்னர் நடத்திய ஆரத்தி பூஜையில் உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கலந்து கொண்டார். தொடர்ந்து சங்கம் படித்துறைப் பகுதியில் பூட்டான் மன்னர் படகு சவாரி செய்து, அங்குள்ள சைபீரிய பறவைகளுக்கு இரை போட்டார். பிரயாக்ராஜில் படே அனுமான் கோவில் உள்ளிட்ட இடங்களில் வழிபட்ட அவர், டிஜிட்டல் மகாகும்ப அனுபவ மையத்தில், கும்பமேளாவின் ஆழமானப் பொருளை எடுத்துக் கூறும் வகையிலான தொழில் நுட்பக் காட்சிகளையும் பார்வையிட்டார். மகாகும்பமேளாவில் பூட்டான் மன்னரின் பங்கேற்பினால், இந்தியா-பூட்டான் நட்புறவும், கலாச்சார உறவுகளும் வலுப்பெறும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உத்தரபிரதேஸ் மாநிலம் பிரயாக்ராஜில், கடந்த மாதம் 13-ஆம் தேதி தொடங்கிய மகா கும்பமேளாவில் இதுவரை 38 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*நிதித் துறை செயலர்*

வளர்ச்சியைத் தூண்டி மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்து இருப்பதாக மத்திய நிதிதுறை செயலர் திரு டிகே பாண்டே கூறி உள்ளார். பட்ஜெட்டின் வரி விதிப்பு உத்தேசங்கள் பற்றிய பகுப்பாய்வு என்ற தலைப்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசுகையில் அனைத்து துறைகளின் தேவைகளையும் சமநிலைப்படுத்தும் வகையில் பட்ஜெட் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும், பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள Bharat Trade NET திட்டத்தினால், வங்கிகள், ஏற்றுமதியாளர்கள், சுங்கத்துறை அதிகாரிகள், மற்றும், சம்பந்தப்பட்ட அனைவரையும், ஒரே டிஜிட்டல் கட்டமைப்பில் கொண்டு வர ஏதுவாகும் என்றார். நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்த பணவீக்கத்தை வலுவாக கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நிதித் துறை செயலர் வலியுறுத்தினார். நிதிக் கொள்கையும், பணக் கொள்கையும் ஒருங்கிணைந்து செயல்படுதல் அவசியம் என்றும் அவர் கூறினார்.

*வடகிழக்கு*

வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சகம், நாளை சென்னையில், வடகிழக்கு மாநிலங்கள் உடனான வர்த்தகம் மற்றும் முதலீடுகள் குறித்து, சாலைக் காட்சி ஒன்றை நடத்த உள்ளது. இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா, இந்நிகழ்ச்சியை தொடக்கி வைக்கிறார். இதன் ஒரு பகுதியாக, மத்திய-மாநில அரசுத் துறைகளுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் இடையே கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் வடகிழக்கு மாநிலங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை அரசு அதிகாரிகள் மூலம் முதலீட்டாளர்கள் தெரிந்து கொள்ள இதனால் ஏதுவாகும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ஜெயக்குமார்*

புதுச்சேரியில் வரும் 7-ஆம் தேதி முதல், தாவரவியல் பூங்காவில் நடைபெற உள்ள, 35-ஆவது காய்-கனி மற்றும் மலர் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் குறித்து, வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் இன்று சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். காவல்துறை டிஜஜி திரு சத்தியசுந்தரம், சட்டம்-ஒழுங்கு பிரிவு முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு கலைவாணன், போக்குவரத்துப் பிரிவு முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு பிரவீண்குமார் திரிபாதி, புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி, வேளாண் துறை இயக்குநர் திரு வசந்தகுமார் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

*விருது*

புதுச்சேரியில், கலைமாமணி விருதாளர் சங்கம் சார்பில், கன்னியக்கோவிலில் நடைபெற்ற நாட்டுப்புற கலைவிழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு செந்தில்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, நாட்டுபுறக் கலைஞர்கள் 73 பேருக்கு கலை ரத்னா விருது வழங்கி பாராட்டினார். சங்கத்தின் நிறுவனர் கலைமாமணி தமிழ்வாணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கத் தலைவர் கலைமாமணி அரியபுத்திரி, துணைத் தலைவர் கலைமாமணி விஜயகுமார், மற்றும் கலைமாமணி விருதாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். நாட்டுப்புற கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும், விழாவில் இடம் பெற்றன.

*புதுச்சேரி-மீனவர்கள்*

இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் 27-ஆம் தேதி, துப்பாக்கிச் சூடு மூலம் கைது செய்யப்பட்ட காரைக்கால் மீனவர்களை மீட்க மத்திய-மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி இன்று புதுச்சேரியில் 200-க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பந்தப்பட்ட காரைக்கால் மீனவரின் குடும்பத்தினரும் இதில் கலந்து கொண்டு, இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்கள் இலங்கை சிறைகளில் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதாக தெரிவித்தனர். மீனவர்களை மீட்பதில் மத்திய-மாநில அரசுகள் மெத்தனமாக இருந்தால் மாநிலம் தழுவிய போராட்டம் நடத்தப்படும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

*காரைக்கால்*

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்தில், கடந்த வாரம் கடல் உள்வாங்கியதால் சேதமடைந்த, மீன் இறக்கும் தளத்தை, இன்று மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் நேரில் பார்வையிட்டு, சேதங்களை விரைந்து சரிபடுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிக்காமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் தடை செய்யப்பட்ட மீன்களை பிடிக்க கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து காரைக்கால் மேட்டில், மீனவர் வலை பின்னும் தளத்தை அவர் நேரில் சென்று பார்வையிட்டார். மீன்பிடி தளத்தை சீரமைத்து தரவும், மண் அரிப்பு ஏற்படாத வகையில் தடுப்புகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். கண்காணிப்பு பொறியாளர் திரு சந்திரசேகரன் மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*டென்னீஸ்*

மும்பையில் நடைபெறும், மும்பை ஓப்பன் டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், நாளை நடைபெற உள்ள, காலிறுதிக்கு முந்தைய

போட்டியில், இந்தியாவின் அங்கிதா ரைனா, கனடா வீராங்கனை ரெபக்கா மரினோ-வுடன் மோதுகிறார். அங்கிதா ரைனா, இன்று நடைபெற்ற ஆரம்ப சுற்றுப் போட்டியில், சகவீராங்கனை வைஷ்ணவி அட்கரைத் தோற்கடித்து, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

*ஓம் பிர்லா*

மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா இன்று, சம்விதான் சதன் என்னும் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தின் மைய மண்டபத்தில் உள்ள, முன்னாள் சபாநாயகர் அனந்தசயனம் அய்யங்காரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அனந்தசயனம் அய்யங்கார் பிறந்த நாளை ஒட்டி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவையின் துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ், முன்னாள்-இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் மக்களவைச் செயலர் திரு யு கே சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விடுதலை போராட்ட வீரரான அனந்தசயனம் அய்யங்கார், அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராகவும், முதல் 3 மக்களவைகளில் சபாநாயகராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

*சவ்கான்*

வேளாண் துறையை வலுப்படுத்தவும் விவசாயிகளின் நலனை மேம்படுத்தவும் அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார். விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க பிரதமர் திரு நரேந்திர மோடி மிகுந்த முக்கியத் துவம் அளிப்பதாகவும், நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தி, குறுகிய காலத்திலேயே அதிகரித்து இருப்பதற்கு, அரசின் பல்வேறு முன் முயற்சிகளே காரணம் என்றும் அவர் இன்று மக்களவையில், விவாதங்களின் போது கூறினார். விதைப்பிற்கு முந்தைய பருவத்தில் இருந்து, அறுவடைக்கு பிந்தைய பருவம் வரை, எதிர்பாராத இயற்கை சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய எல்லா நஷ்டங்களையும் ஈடுகட்டும் வகையிலான பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தை, 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தற்போது அமல்படுத்தி வருவதாகவும் மற்ற மாநிலங்களும் இதை அமல்படுத்த வேண்டும் என மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

*பாகிஸ்தான்-அஸ்தி*

பாகிஸ்தானில் உள்ள இந்துக்கள் மற்றும் சீக்கியர்களில், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் உயிர் இழந்த சுமார் 400 பேரின் அஸ்தி, இன்று, அட்டாரி-வாகா எல்லையில் உள்ள இந்தியா-பாகிஸ்தான் கூட்டு சோதனைச் சாவடி வழியாக, இந்தியாவிற்கு எடுத்து வரப்பட்டு, கங்கை நதியில் கரைப்பதற்காக,

ஹரித்துவாருக்கு கொண்டு செல்லப்பட்டது. இதுவரை, சம்பந்தப்பட்ட குடும்பங்களிடம் இருந்த அஸ்தியை, பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள பஞ்சமுகி அனுமார் கோவில் அர்ச்சகர் ராம்நாத் மகராஜ், பெரிய பைகளில் வைத்து இந்தியாவிற்குள் எடுத்து வந்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

21-ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் அரசின் சாதனைகள் இடம் பெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

டெல்லியில் நாளை நடைபெற உள்ள, 70 உறுப்பினர் சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டு உள்ளன.

வளர்ச்சியைத் தூண்டி மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்து இருப்பதாக மத்திய நிதிதுறை செயலர் திரு டிகே பாண்டே கூறி உள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற உள்ள, காய்-கனி மற்றும் மலர் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் குறித்து, வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 4.2.2025/Script.

--------------------------------